# இலங்கை மத்திய வங்கியின் ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வு 2024

நா. ஜனகன்
சிரேஷ்ட பொருளியலாளர்
இலங்கை மத்திய வங்கி

2025 மே 27

# *2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 80(3)ஆம் பிரிவு*




"மத்திய வங்கியானது ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னரான **நான்கு மாத காலப்பகுதியினுள்,** அதன் **கொள்கைக் குறிக்கோள்கள் மற்றும் நிதியியல் முறைமையின் நிலைமை என்பவற்றினை வலியுறுத்தி**, அத்தகைய நிதியாண்டின் போது **பொருளாதாரத்தின் நிலைமை பற்றி** ஆளும் சபையினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட **அறிக்கையொன்றினை வெளியிட்டு அமைச்சரினூடாகப் பாராளுமன்றத்தின் முன்னிலையில் சமர்ப்பிப்பதனை** மத்திய வங்கியின் ஆளுநர் உறுதிப்படுத்துதல் வேண்டும். அத்தகைய நிதியாண்டுக் காலப்பகுதியில் பின்பற்றப்பட்ட **மத்திய வங்கியின் கொள்கைகளின் மீளாய்வையும் மதிப்பீட்டையும்** இவ்வறிக்கை உள்ளடக்குதல் வேண்டும்".

# ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வின் உள்ளடக்கம்

1. முதன்மை பொருளாதாரக் குறிகாட்டிகள் மற்றும் முதன்மை சமூகக் குறிகாட்டிகள்
2. சுருக்க அறிக்கை
3. நிழற்படம்
4. அத்தியாயங்கள்
    - அத்தியாயம் 1: பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள்
    - அத்தியாயம் 2: நிதியியல் முறைமையின் நிலைமைகள்
    - அத்தியாயம் 3: மத்திய வங்கிக் கொள்கைகளின் மீளாய்வு
    - அத்தியாயம் 4: பேரண்டப்பொருளாதாரத் தோற்றப்பாடு
5. சிறப்புக் குறிப்புக்கள்
6. சிறப்பு வரைபடங்கள்
7. இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அல்லது அதனுடன் தொடர்புடைய முக்கிய பொருளாதாரக் கொள்கை வழிமுறைகள்
8. புள்ளிவிபரப் பின்னிணைப்பு
9. சிறப்பு புள்ளிவிபரப் பின்னிணைப்பு

**புள்ளிவிபர பிற்சேர்க்கை பற்றிய விரிவான பதிப்புக்கள் எக்ஸெல் வடிவில் இணையவழியில் கிடைக்கப்பெறுகின்றது.*



# இலங்கைப் பொருளாதாரமானது இரு ஆண்டுகளுக்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட அதன் மிக ஆழமான பொருளாதாரச் சரிவைத் தொடர்ந்து, 2024இல் தொடர்ந்து உறுதியுடன் மீட்சியடைந்தது

மீட்சிக்கான பாதை கடினமாக இருந்தபோதிலும், படுகடன் இடருக்குள்ளான ஏனைய பல நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு விரைவானதாக இருந்தது

பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டத்தினால் துணையளிக்கப்பட்ட மறுசீரமைப்புக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு அரசியல் உறுதிப்பாடு மீளமைக்கப்பட்டதுடன் வெளிநாட்டு படுகடன் மறுசீரமைப்பு நிறைவடையும் கட்டத்தை எட்டியுள்ளது

RDயிலிருந்து (மட்டுப்படுத்தப்பட்ட தவணைதவறுதல் தரப்படுத்தலிலிருந்து) நாடு வெளியேறுவதற்கு இவை உறுதுணையளித்தன

## நிழற்படம் 2024



# இலங்கைப் பொருளாதாரத்தின் மீட்சி

நெருக்கடியின் உச்ச நிலையில் எதிர் 2024

| | நெருக்கடியின் உச்ச நிலையில் | 2024 |
|---|---|---|
| பணவீக்கம் (கொ.நு.வி.சு, ஆண்டிற்காண்டு, %) | 69.8 (செத் 2022) | -1.7 (ஆண்டு இறுதி) |
| மொ.உ.உற்பத்தி வளர்ச்சி (ஆண்டிற்காண்டு, %) | -7.3 (2022) | 5.0 |
| தலைக்குரிய மொ.உ.உற்பத்தி (ஐ.அ.டொலர்) | 3,464 (2022) | 4,516 |
| வட்டி வீதம் (சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை கடன்வழங்கல் வீதம், %) | 29.7 (வாரம் 4, நவெ 2022) | 8.9 (ஆண்டு இறுதி) |
| தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சி (ஆண்டிற்காண்டு, %) | -9.7 (மே 2023) | 10.7 (ஆண்டு இறுதி) |
| செலாவணி வீதம் (ரூ/ ஐ.அ.டொலர்) | 365 (வாரம் 2, மே 2022) | 293 (ஆண்டு இறுதி) |

நெருக்கடியின் உச்ச நிலையில் எதிர் 2024

| | நெருக்கடியின் உச்ச நிலையில் | 2024 |
|---|---|---|
| மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (சீன மக்கள் வங்கியின் நாணய பரஸ்பர பரிமாற்றலுடன், ஐ.அ.டொலர் பில்) | 1.7 (ஒகத் 2022) | 6.1 (ஆண்டு இறுதி) |
| செயற்படா கடன்கள்/கட்டம் 3 கடன்கள் விகிதம் (%) | 13.6 (செத் 2023) | 12.3 (ஆண்டு இறுதி) |
| மத்திய அரசின் படுகடன்** (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக) | 114.2 (2022) | 96.1 (ஆண்டு இறுதி) |
| அரசிறை மற்றும் கொடைகள் (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக) | 8.3 (2021) | 13.7 |
| திரண்ட இறை மீதி (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக) | -11.7 (2021) | -6.8 |

*2020ஆம் ஆண்டிற்கு பின்னரான தரவுகள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியத்தின் அடிப்படையிலமைந்தன

**2024 ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வின் அட்டவணை 1.21இல் உள்ள அடிக்குறிப்புகளை பார்க்க

# இலங்கை பொருளாதார மீட்சி


































# பணவீக்கமும் உண்மைத் துறை அபிவிருத்திகளும்

# பணவீக்கமானது 2024இல் ஒட்டுமொத்த குறைவடைந்து செல்கின்ற போக்கினை பின்தொடர்ந்து, ஆண்டிறுதியில் பணச்சுருக்க மட்டங்களை அடைந்தது


**முதன்மை மற்றும் மையப் பணவீக்கத்தின் அசைவுகள் (கொ.நு.வி. சுட்டெண், ஆண்டிற்காண்டு**




மூலம்: தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

- **தொடர்ச்சியான மின்சார தீர்வைக் குறைப்புக்கள் முதன்மைப் பணவீக்கத்தின் வீழ்ச்சிக்கு பெரும்பாலும் பங்களித்திருந்தன.**
- **ஏனைய பங்களிப்பு காரணிகள்:**
  - உலகளாவிய பண்ட விலைகள் மிதமடைதல்
  - இலங்கை ரூபாய் வலுவடைதல்
  - புள்ளிவிபரத் தளத் தாக்கம்

**கொ.நு.வி. சுட்டெண் அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கத்திற்கான பங்களிப்பு (ஆண்டிற்கு ஆண்டு)**





மூலம்: தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

# பொது விலை மட்டம் 2024இல் ஒட்டுமொத்த வீழ்ச்சி அடைந்து செல்கின்ற போக்கினைக் காண்பித்தது

- **உணவுப் பொருட்களின் விலைகள்** ஒட்டுமொத்த **வீழ்ச்சியடைந்து செல்கின்ற** போக்கினைக் காண்பித்தன
    - தளம்பல்மிக்க உணவு விலைகளில் வீழ்ச்சி
    - இறக்குமதிசெய்யப்பட்ட உணவுப் பொருட்களின் விலைகளில் வீழ்ச்சி
- **உணவல்லாப் பொருட்களின் விலைகளும்** ஒட்டுமொத்த **வீழ்ச்சிப்** போக்கினைக் காண்பித்தன
    - செலவினை பிரதிபலிக்கும் நிருவகிப்பட்ட விலைகளுக்கான கீழ்நோக்கிய திருத்தங்கள்
- நுகர்வோர் விலைச்சுட்டெண்களின் ஆண்டிற்கான சராசரி மாற்றத்தினால் பிரதிபலிக்கப்பட்டவாறு, **வாழ்க்கைச் செலவு** 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024இல் **சிறிதளவு அதிகரிப்பினை** காண்பித்தது
- தற்போதுள்ள **தற்காலிக** காலப்பகுதிக்கான **பணச்சுருக்கம், வாழ்க்கைச் செலவையும்** அதேபோன்று உற்பத்திச் செலவையும் ஓரளவிற்கு தளர்த்துவதற்கு உதவும்


வரைபடம் 1.2: கொ.நு.வி. சுட்டெண் எதிர் முதன்மைப் பணவீக்கம்




கம்பனித் துறை மற்றும் குடியிருப்புத் துறை ஆகிய இரண்டு துறைகளது **பணவீக்க எதிர்பார்க்கைகளும்** 2024 காலப்பகுதியில் ஒட்டுமொத்த **வீழ்ச்சியடைந்து செல்கின்ற போக்கொன்றினைப்** பின்தொடர்ந்து, உண்மைப் பணவீக்கத்துடன் ஒத்திசைந்து காணப்பட்டது

# இரு ஆண்டுகால சுருக்கத்தினைத் தொடர்ந்து, 2024இல் 5.0 சதவீத உண்மை வளர்ச்சி வீதத்துடன் இலங்கை பொருளாதாரம் மீளெழுச்சியடைந்தது

**வரைபடம் 1.8: வருடாந்த உண்மை மொ.உ.உற்பத்தி ஆண்டு வளர்ச்சி வீதங்கள் (அ)**




(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை (அடிப்படை ஆண்டு 2015) அடிப்படையாகக் கொண்டது

**நடைமுறைச் சந்தை விலைகளில் கூட்டுக் கேள்வி**

| பொருளாதார நடவடிக்கை | ரூ. பில்லியன் | | மொ.உ.உ இன் சதவீதமாக | |
|---|---|---|---|---|
| | 2023 | 2024 | 2023 | 2024 |
| **1. உள்நாட்டு கேள்வி** | **28,011.5** | **30,683.4** | **102.2** | **102.6** |
| 1.1 நுகர்வு | 21,270.3 | 22,623.0 | 77.6 | 75.7 |
| 1.2 முதலீடு (மொத்த மூலதன உருவாக்கம்) | 6,741.2 | 8,060.3 | 24.6 | 27 |
| **2. தேறிய வெளிநாட்டு கேள்வி** | **-591.7** | **-784.8** | **-2.2** | **-2.6** |
| **3. மொத்த கேள்வி (மொ.உ.உ.) (1+2)** | **27,419.8** | **29,898.6** | **100** | **100** |

- தயாரிப்பு மற்றும் கட்டடவாக்க மீளெழுச்சியினால் வழிவகுக்கப்பட்டு **கைத்தொழிலிருந்து ஒட்டுமொத்த வளர்ச்சி ஏற்பட்டது**
- போக்குவரத்து மற்றும் தங்குமிடவசதியில் ஏற்பட்ட நிலைபெறத்தக்க ஈட்டல்களின் மூலம் உந்தப்பட்டு, **பணித் துறையும் வலுவாக வளர்ச்சியடைந்தது**
- நுகர்வு செலவினம் மற்றும் முதலீட்டு செலவினத்தில் ஏற்பட்ட வளர்ச்சியினால் உந்தப்பட்டு, **உள்நாட்டு கேள்வி வளர்ச்சியடைந்தது**

# 2024இல் சனத்தொகை மற்றும் தொழிற்படை பங்கேற்பு வீதம் வீழ்ச்சியடைந்த அதேவேளை, தொழிலின்மை வீதம் குறைவடைந்தது

**அட்டவணை 1.5: குடும்ப அலகுகளின் குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழிற்படை பங்கேற்பு (அ)**

| விடயம் | 2023 | 2024 (ஆ) |
|---|---|---|
| குடும்ப அலகுகளின் எண்ணிக்கை '000 ஆட்கள் | 17,306 | 17,551 (இ) |
| தொழிற்படை '000 ஆட்கள் | 8,408 | 8,316 |
| தொழிலுள்ளோர் | 8,010 | 7,949 (இ) |
| தொழிலற்றோர் | 398 | 367 (இ) |
| தொழிலின்மை வீதம் | 4.7 | 4.4 |
| ஆண் | 3.6 | வி.கி. |
| பெண் | 7.0 | வி.கி. |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் (ஈ) | 48.6 | 47.4 |
| ஆண் | 68.6 | வி.கி. |
| பெண் | 31.3 | வி.கி. |

(அ) 2025 மார்ச் 28இல் கிடைக்கப்பெற்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டது

4.4%

தொழிலின்மை வீதம்

2023இல் 22.0 மில்

0.5%

2024இல் 21.9 மில்

நடுவாண்டு குடித்தொகை

47.4%

தொழிற்படை பங்கேற்பு வீதம்

5.8%

வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பிற்கான நாட்டிலிருந்தான புறப்படுகைகள்

* 2024ஆம் ஆண்டின் குடித்தொகை மற்றும் வீடமைப்பின் தொகைமதிப்பிற்கமைவாக, இலங்கையின் மொத்த குடித்தொகை – 21.763 மில்லியன் ஆகும்.

# நாணயத் துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும்

# நாணயக் கொள்கை நிலைப்பாடானது 2024இல் அதிகரித்தளவில் தளர்வடைந்திருந்தது

2024இல் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாடு பின்பற்றப்பட்டதற்கு

- குறைவடைந்த பணவீக்கம்
- நன்கு நிலைநிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகள்
- இறுக்கமான இறை வழிமுறைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்தல்
- வலுவான வெளிநாட்டுத்துறைச் செயலாற்றம்

போன்றன காரணங்களாக அமைந்தன.

**கொள்கை வட்டி வீதங்களின் குறைப்பு**

**2024**

| மார்ச் | யூலை | நவெம்பர் |
|---|---|---|
| 50 அடிப்படைப் புள்ளிகள் | 25 அடிப்படைப் புள்ளிகள் | ஏறத்தாழ 50 அடிப்படைப் புள்ளிகள் |

* இது 2023இல் 650 அடிப்படை புள்ளிகளின் குறைப்பிற்கு மேலதிகமாக காணப்படுகின்றது


## நாணயக் கொள்கை தொடர்பூட்டல் மீதான அதிகரித்த வலியுறுத்தல்

- ✓ *சமூக ஊடகத் தளங்கள்*
- ✓ *சிநேகபூர்வ மற்றும் நேரடியான தொடர்பூட்டல் பொருட்கள்*
- ✓ *தொடர்பூட்டலுக்கான வழமையான வழிமுறைகளை மேம்படுத்தல்*
- ✓ *ஆர்வலர்களின் விழிப்புணர்வை மேம்படுத்தல்*
- ✓ *நியதிசட்ட வெளியீடுகள் மற்றும் அறிக்கை*


# சந்தை வட்டி வீதங்களில் தளர்த்தப்பட்ட கொள்கை நிலைப்பாடு பிரதிபலிக்கப்பட்டது

## சந்தை வட்டி வீதங்கள் அவற்றின் கீழ்நோக்கிய உத்வேகத்தினைத் தொடர்ந்தன


### வைப்பு வீதங்கள்




### கடன்வழங்கல் வீதங்கள்




## 2024இல் உள்நாட்டு பணச் சந்தையில் திரவத்தன்மை குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது





மூலம்: இலங்கை மத்திய வங்கி


**இறைச் செயலாற்றத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மேம்பாடுகள், நாணயக் கொள்கைத் தளர்த்தல் மற்றும் இடர்நேர்வு மிகையின் படிப்படியான மறைவடைதல் ஆகியவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில், அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள் 2024இல் வீழ்ச்சியடைந்தன**

# தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2024இல் குறிப்பிடத்தக்க விரிவாக்கமொன்றைப் பதிவுசெய்தது

## கொடுகடன் அளவின் மாதாந்த மாற்றம் எதிர் கொடுகடன் வளர்ச்சி (ஆண்டிற்கு ஆண்டு)




## துறைரீதியான கொடுகடனின் காலாண்டு மாற்றம் எதிர் துறைரீதியான கொடுகடனின் வளர்ச்சி (ஆண்டிற்கு ஆண்டு)





### துறை ரீதியான கொடுகடன் வளர்ச்சி (ஆண்டிற்கு ஆண்டு)

| | |
|---|---|
| வேளாண்மை மற்றும் மீன்பிடி | 12.6% |
| பணிகள் | 12.3% |
| தனிப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 11.3% |
| கைத்தொழில் | 8.4% |

**அனைத்து பொருளாதார துறைகளிலும் கொடுகடன் விரிவாக்கம் காணப்படுகின்றது**

# வங்கித்தொழில் முறைமையின் மூலம் அரசத் துறைக்கான கொடுகடனின் இயக்கவாற்றல் அண்மையில் மாற்றமடைந்துள்ளது

வரைபடம் 1.15: வங்கித்தொழில் முறைமையிலிருந்தான அரச துறைக்கான கொடுகடனின் வருடாந்த மாற்றம்




* இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளிநின்ற வெளிநாட்டு நாணயப் படுகடனானது 2023இல் மத்திய அரசப் படுகடனில் உள்ளீர்க்கப்பட்டது

மத்திய வங்கியின் மூலமான **அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன்** 2024இல் **ரூ.602.7 பில்லியனினால்** குறிப்பிடத்தக்களவு **வீழ்ச்சியடைந்தமைக்கு,**

- மத்திய வங்கியிடமிருந்தான திறைசேரி உண்டியல்களின் சுமை குறைக்கப்பட்டமை
- பங்கேற்கும் நிறுவனங்களின் மத்திய வங்கியின் துணைநில் கடன்வழங்கல் வசதியின் மீதான குறைந்தளவிலான தங்கியிருத்தல்

என்பன காரணங்களாக அமைந்தன.

மாறாக, **உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் மூலமான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனானது** ஆண்டுக் காலப்பகுதியில் **ரூ.587.8 பில்லியன்** தொகையிலான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் மூலமான அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளிற்கான** கொடுகடனானது 2024இல் **ரூ.113.1 பில்லியன்** தொகையினால் வீழ்ச்சியடைந்தது.

- *முக்கிய அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் மேம்பட்ட நிதியியல் செயலாற்றத்திற்கு மத்தியில் அவற்றின் தேறிய மீள்கொடுப்பனவுகளினால் இது முக்கியமாக உந்தப்பட்டது.*

# இலங்கை மத்திய வங்கிச் சட்டம் மத்திய வங்கியின் முக்கிய குறிக்கோளாக உள்நாட்டு விலை உறுதிப்பாட்டை அடைதலையும் பேணுதலையும் குறித்துரைக்கின்றது

## நாணயக் கொள்கை கட்டமைப்பு

- ✓ நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீத முறைமையுடன் **நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல்**
- ✓ மத்திய வங்கி காலாண்டு **முதன்மைப் பணவீக்கத்தினை** 5 சதவீதம் கொண்ட இலக்கில் **பேணுவது** அவசியமாகும்

## வெளிப்படைத்தன்மையும் பொறுப்புகூறும்தன்மையும்

- ✓ பணவீக்க இலக்கு தொடர்ச்சியாக இரு காலாண்டுகளுக்கு அடையப்படவில்லையெனின், **நாணயக் கொள்கைச் சபை பாராளுமன்றத்திற்கு அறிக்கையொன்றை சமர்ப்பித்து அதனை பொதுமக்களுக்கும் கிடைக்கப்பெறச்செய்தல் வேண்டும்**
- ✓ மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சுடன் தொடர்புடைய விடயங்களை கலந்துரையாடுவதற்கு **ஒருங்கிணைப்புச் சபை** காலாண்டிற்கு ஒருமுறை கூடுகின்றது
- ✓ **நாணயக் கொள்கை அறிக்கை ஆண்டிற்கு இருமுறை** வெளியிடப்படுகின்றது


## ஓரிரவு கொள்கை வீதம்

- ✓ 2024இல் **மத்திய வங்கி** அதன் இரட்டை கொள்கை வட்டி வீதத்திலிருந்து **ஒற்றை கொள்கை வட்டி வீதப் பொறிமுறைக்கு மாற்றமடைந்தது**
- ✓ **சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் தொழிற்பாட்டு இலக்காக** தொடர்ந்தும் செயற்படுகின்றது
- ✓ தற்போது **ஓரிரவு கொள்கை வீதம் 7.75%** ஆகக் காணப்படுகின்றது

# வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம்

# வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறை 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் விரிவடைந்திருந்த போதிலும், அண்மைய வரலாற்று ரீதியிலான சராசரிகளை விடவும் குறைவாகத் தொடர்ந்தும் காணப்பட்டது


## ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு




- ஆடைகள் துறையில் மீட்சி,
- பெற்றோலிய ஏற்றுமதிகளின் விஞ்சிய செயலாற்றும்

என்பவற்றின் மூலம் ஆதரவளிக்கப்பட்டு, **7.2 சதவீதம் கொண்ட (ஆண்டிற்கு ஆண்டு) ஏற்றுமதி வளர்ச்சி**


## இறக்குமதிகளின் உள்ளமைப்பு




- அதிகரித்தளவிலான பொருளாதார நடவடிக்கைகள்,
- இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் தளர்த்தல்
- சாதகமான உலகளாவிய விலை இயக்கவாற்றல்கள்

என்பன காரணமாக, **12.1 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) இறக்குமதி வளர்ச்சி**

## இருபுடை வர்த்தக நிலுவைகள்




- **இந்தியாவுடனான** மொத்த வர்த்தகம் - **ஐ.அ.டொலர் 4.8 பில்லியன்**
- **சீனாவுடனான** மொத்த வர்த்தகம் - **ஐ.அ.டொலர் 4.6 பில்லியன்**
- **ஐக்கிய அமெரிக்காவுடனான** மொத்த வர்த்தகம் - **ஐ.அ.டொலர் 3.4 பில்லியன்**


**2024: ஐ.அ.டொலர் 6.1 பில்லியன்**
2023: ஐ.அ.டொலர் 4.9 பில்லியன்

**வர்த்தகப் பற்றாக்குறை**

**கா1 2025: ஐ.அ.டொலர் 1.5 பில்லியன்**
கா1 2024: ஐ.அ.டொலர் 1.2 பில்லியன்

# பணிகள் கணக்கு மிகை 2024ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்தது

## பணிகள் உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள்





*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

- பணிகள் கணக்கு **மிகையானது** 2023இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 3.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2024ஆம் ஆண்டில் **ஐ.அ.டொலர் 3.4 பில்லியனிற்கு** அதிகரித்தது
- **சுற்றுலாத்துறை, கடல் போக்குவரத்து, கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளல் துறைகள்** உள்ளடங்கலாக, முக்கிய பணிகள் துறைகளுக்கான உறுதியான உட்பாய்ச்சல்களின் மூலம் இவ்வளர்ச்சி தூண்டப்பட்டிருந்தது
- 2023இல் பதிவுசெய்யப்பட்ட 1.49 மில்லியன் வருகைகளுடன் ஒப்பிடுகையில், **2024இல் 2.05 மில்லியன்** சுற்றுலாப் பயணிகளின் வருகைகளைப் பதிவுசெய்ததன் மூலம் சுற்றுலாத்துறை தொடர்ந்தும் அதன் உத்வேகத்தைக் காண்பித்தது
- 2023இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 2.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் **2024ஆம் ஆண்டில்** சுற்றுலாத்துறையிடமிருந்தான வருவாய்கள் **ஐ.அ.டொலர் 3.2 பில்லியனாக** மதிப்பிடப்பட்டு, 53.2 **சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றைப்** பதிவுசெய்தது

# வெளிநாட்டு நடைமுறைக் கணக்கானது 2024ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக கணிசமானளவு மிகையொன்றினைப் பதிவுசெய்தது

## மாதாந்த வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு புள்ளிவிபரங்கள்





*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

## நடைமுறை கணக்கு 2024ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 1.2 பில்லியன் மிகையொன்றினைப் பதிவுசெய்தது

| 2023 ஐ.அ.டொ. மில்லியன் (திருத்தப்பட்டது) | | 2024 ஐ.அ.டொ. மில்லியன் (தற்காலிகமானது) |
|---|---|---|
| -4,900 | வர்த்தக நிலுவை | -6,069 |
| 3,053 | பணிகள் கணக்கு (தேறிய) | 3,435 |
| -2,548 | முதலாந்தர வருமானக் கணக்கு (தேறிய) | -2,599 |
| 5,834 | இரண்டாந்தர வருமானக் கணக்கு (தேறிய) | 6,439 |
| 1,439 | நடைமுறை கணக்கு (தேறிய) | 1,206 |

# இடைக்கிடையிலான தளம்பல்களுக்கு மத்தியில் செலாவணி வீதமானது தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக உயர்வொன்றைப் பதிவுசெய்தது


வரைபடம் 1.21: நாளாந்த செலாவணி வீத அசைவுகள்




* 2025 ஏப்பிறல் இறுதியில் உள்ளவாறு.


*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

செலாவணி வீத உயர்வு/ தேய்வு




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


இலங்கை மத்திய வங்கியின் தலையீடு






*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

- **2024இல் வெளிநாட்டுச் செலாவணியின் மிகவும் உயர்ந்தளவிலான அளவொன்றினைக் கொள்வனவுசெய்து,** உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் **மத்திய வங்கியானது** தலையிட்டது
- **நாணய தேய்மானம் மற்றும் உயர்வடைதல் ஆகிய இரண்டும் அவற்றிற்குரிய நன்மைகளையும் தீமைகளையும் கொண்டுள்ளன**
- **நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீத ஏற்பாட்டின்** கீழ், செலாவணி வீத அசைவுகள் **கேள்வி மற்றும் நிரம்பல் நிலைமைகளினால் பாரியளவில் தீர்மானிக்கப்படும்.**

# நெருக்கடிக்கு பின்னர், மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் V வடிவ மீட்சியைப் பதிவுசெய்தன




**ஒதுக்குப் போதுமையானது** நெருக்கடி காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2024இல் சடுதியாக **மேம்பட்டது**.


**2025 ஏப்பிறல் இறுதியில் (தற்காலிகமானது)**

- **மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் = ஐ.அ.டொலர் 6.3 பில்லியன்**
- ஒதுக்குப் போதுமை: இறக்குமதிகளின் மாதங்கள் = 3.9
- ஒதுக்குப் போதுமை: குறுகிய காலப் படுகடனின் சதவீதமாக = 123%
  (2024 திசெம்பர் இறுதியில் குறுங்கால வெளிநாட்டுப் படுகடன் அடிப்படையில்)

# இறைத் துறைச் செயலாற்றம்

# அனைத்து இறை நிலுவைகளும் 2024இல் குறிப்பிடத்தக்களவு மேம்பட்டன

முக்கிய இறை மீதிகள் (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக)





*மூலம்:* நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

- **முதலாந்தர நிலுவை – ரூ.650 பில்லியன் மிகை (மொ.உ.உற்பத்தியின் 2.2 சதவீதம்)**
  - இறை மற்றும் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும்தன்மையை மேம்படுத்துவதற்கும் பாடுபட்டு வென்றெடுக்கப்பட்ட பேரண்டபொருளாதார உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதற்கும் **சாதகமான முதலாந்தர நிலுவையைப் பேணுவது அவசியமாகும்**
- **நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது** ரூ.1,309 பில்லியனிற்கு (மொ.உ.உற்பத்தியின் 4.4 சதவீதம்) **வீழ்ச்சியடைந்தது**
- **ஒட்டுமொத்த வரவுசெலவுத்திட்ட நிலுவைப் பற்றாக்குறை (மொ.உ.உற்பத்தியின் 6.8 சதவீதம்) ரூ.2,040 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தது**


# கடுமையான அரசிறை மேம்பாடுகள் மற்றும் செலவினத்தை சிக்கனப்படுத்தும் வழிமுறைகளின் உத்வேகம் 2024இல் தொடர்ந்தன

## வரைபடம் 1.23: அரசிறையின் உள்ளமைப்பு - 2024




*மூலம்:* நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு


## வரைபடம் 1.24: அரச மீண்டெழும் செலவினத்தின் உள்ளமைப்பு - 2024




*மூலம்:* நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

**அரசிறை மற்றும் மீண்டெழும் செலவினம் என்பன 2024இல் (ஆண்டிற்கு ஆண்டு) முறையே 32.2 சதவீதத்தினாலும் 13.6 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன**

# மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மத்திய அரசப் படுகடன் மேம்பட்டது





*மூலங்கள்:* நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

- பெயரளவு மொ.உ.உற்பத்தி வளர்ச்சி மற்றும் வெளிநாட்டு நாணயப் படுகடன் மீதான இலங்கை ரூபாவின் பெறுமதியுயர்வு என்பவற்றினால் உந்தப்பட்டு **மொ.உ.உற்பத்தி வீதத்திற்கான மத்திய அரசப் படுகடன் வீழ்ச்சியடைந்தது**

- **அரசாங்கம்** வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்காக **உள்நாட்டு மூலங்களில் தொடர்ந்தும் தங்கியிருந்தது**

- 2024ஆம் ஆண்டில், இலங்கை **அதன் படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையை அநேகமாக நிறைவுசெய்து,** அதன் படுகடன் ஸ்தம்பித்த நிலையை முடிவுக்குக் கொண்டுவந்தது

- **பன்னாட்டு தரமிடல் முகவராண்மைகள்** 2024 டிசெம்பரில் **நாட்டிற்கான கொடுகடன் தரமிடல்களைத் தரமுயர்த்தின.**




* *வெளிநின்ற மத்திய அரசின் படுகடன் தொகுப்பு தொடர்பான மேலதிக தகவல்களுக்கு ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வு 2024இன் 53ஆம் பக்கத்தினை பார்க்கவும்*

# நிதியியல் துறை கொள்கைகளும் செயலாற்றுகையும்


# மேம்பட்ட பேரண்ட நிதியியல் நிலைமைகளால் ஆதரவளிக்கப்பட்டு, நிதியியல் துறைச் செயலாற்றமானது 2024இல் தொடர்ந்து மேம்பட்டது

- மூலதனம் மற்றும் திரவத்தன்மை ஆகிய இரண்டு தாங்கியிருப்புக்களும் ஒழுங்குமுறைப்படுத்தல் அடிமட்டங்களுக்கு மேலே பேணப்பட்டதுடன் **வங்கித்தொழில் துறையின் உறுதிப்பாடு பேணிப்பாதுகாக்கப்பட்ட** அதேவேளையில் முன்மதியுடைய தேவைப்பாடுகளுடனான இணங்குவிப்பும் பேணப்பட்டது

- போதுமான மூலதனம் மற்றும் திரவத்தன்மைத் தாங்கிருப்புக்கள் என்பவற்றுடன் **நிதிக் கம்பனிகள் துறையும்** 2024 காலப்பகுதியில் **தாக்குப்பிடிக்கக்கூடியதாகத் தொடர்ந்தும் காணப்பட்டது**

- நாட்டின் நிதியியல் உட்கட்டமைப்பானது சுமுகமாகத் தொழிற்படத் தொடங்கி, நிதியியல் துறையின் உறுதிப்பாட்டை வசதிப்படுத்தியது

**2024இல் நிதியியல் முறைமையின் மொத்தச் சொத்துக்களின் பங்கு**



# வங்கித்துறை உறுதிப்பாட்டை பேணுவதைத் தொடர்ந்தது


**அட்டவணை 2.3: வங்கித்தொழில் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளமைப்பு**

| விடயம் | 2023 (அ) | | 2024 (ஆ) | | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.பில் | பங்கு (%) | ரூ.பில் | பங்கு (%) | 2023 | 2024 |
| **சொத்துக்கள்** | | | | | | |
| கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் | 11,020.8 | 54.0 | 11,473.7 | 51.7 | -2.6 | 4.1 |
| முதலீடுகள் | 7,299.9 | 35.8 | 9,083.7 | 41.0 | 23.1 | 24.4 |
| ஏனையவை (இ) | 2,073.7 | 10.2 | 1,618.2 | 7.3 | -4.5 | -22.0 |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| வைப்புக்கள் | 16,630.5 | 81.5 | 17,969.4 | 81.0 | 8.7 | 8.1 |
| கடன் பெறுகைகள் | 1,397.4 | 6.9 | 1,280.0 | 5.8 | -25.3 | -8.4 |
| மூலதன நிதிகள் | 1,765.5 | 8.7 | 2,043.2 | 9.2 | 10.5 | 15.7 |
| ஏனையவை | 601.0 | 2.9 | 883.1 | 4.0 | -7.3 | 46.9 |
| மொத்த சொத்துக்கள்/ பொறுப்புக்கள் | 20,394.4 | 100.0 | 22,175.7 | 100.0 | 5.0 | 8.7 |

- **கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள்** 2023இல் காணப்பட்ட 2.6 சதவீத சுருக்கத்திற்கு மாறாக 2024இல் 4.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன
- மொத்த பொறுப்புக்கள் மற்றும் பங்குரிமை மூலதனத்தில் 81.0 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்திய **வங்கித்தொழில் துறையின் வைப்புக்கள்** 2024இல் **வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது**
- வங்கித்தொழில் துறையின் **செயற்படாக் கடன்கள்/ கட்டம் III கடன்கள்** விகிதமானது 2023இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 12.8% உடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் **12.3% சதவீதத்திற்குச் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது**
- வங்கித்தொழில் துறையின் **வரிக்குப் பின்னரான இலாபம்** ரூ. 309.7 பில்லியனிற்கு அதிகரித்து, **சொத்துக்களின் மீதான வருமானம் மற்றும் பங்குரிமை மூலதனத்தின் மீதான வருமானம் என்பவற்றினை முறையே 2.6 சதவீதத்திற்கும் 15.6% சதவீதத்திற்கும் உயர்வடையச் செய்தது**

# நிதியியல் நிறுவனங்கள் 2024இல் குறிப்பிடத்தக்களவு விரிவாக்கமொன்றை பதிவுசெய்தன

வரைபடம் 2.4: சாதனங்கள் வாரியான மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் (தேறிய)




- **கடன்களும் முற்பணங்களும் 2024இல் 22.8% ஆல் வளர்ச்சியடைந்தது**
- மொத்த செயற்படாக்கடன் விகிதம் **11.3%** ஆக குறைவடைந்ததால் **கொடுகடன் தரம் மேம்பட்டது**
- நிதிக் கம்பனிகளின் **திரவத்தன்மை மட்டம் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச மட்டத்திற்கு மிகவும் மேலாகத்** தொடர்ந்தும் காணப்பட்டது
- **வரிக்குப் பின்னரான இலாபம் ரூ. 59.7 பில்லியனிற்கு உயர்வடைந்தது**

# நிதியியல் துறையின் சட்ட மற்றும் ஒழுங்குமறைப்படுத்தல் கட்டமைப்புக்கள் 2024இல் மேலும் வலுப்படுத்தப்பட்டன

- 2024இல் **வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தின் சட்டவாக்கமானது** உரிமம்பெற்ற வங்கிகளை ஆளும், சட்ட கட்டமைப்பை வலுப்படுத்துவதில் மைற்கல்லாகக் காணப்பட்டது
- சாத்தியமான முறையான இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதற்கும் நிதியியல் உறுதிப்பாட்டை வலுப்படுத்துவதற்கும் மத்திய வங்கியின் மூலமான மேம்படுத்தப்பட்ட **பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு**
- இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் நிறுவன ஆளுகை தொடர்பாக **பல்வேறு ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளின் அறிமுகம்**
- நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளிற்கு ஆதரவளிக்கும் பொருட்டு **உரிமம்பெற்ற வங்கிகளில் வியாபார மீட்புப் பிரிவுகளை நிறுவுதல்**
- **நிதியியல் அறிவை மேம்படுத்துவதற்கும், நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிப்பதற்கும் மற்றும்** நிதியியல் துறையில் **இலத்திரனியல் உருமாற்றத்தினை மேம்படுத்துவதற்குமான முயற்சிகளின்** தொடர்ச்சி
- **புதிய பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்திற்கு** மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் **பொதுப் படுகடன் முகாமைத்துவ தொழிற்பாடுகளை படிப்படியாக குறித்தொதுக்குதல்**


இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

2024 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க,
வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம்


இலங்கை மத்திய வங்கி


2024 மாச்சு 28 | சுற்றறிக்கை | 2024இன் 02ஆம் இலக்கம்

உரிமம்பெற்ற வங்கிகளில் வியாபார மீளெழுச்சி பிரிவுகளை நிறுவுவதற்கான வழிகாட்டல்கள்

# பேரண்டப்பொருளாதார தோற்றப்பாடு

# பணவீக்கமானது 2025இன் அண்மைக்காலத்தில் சாதகமாகத் திரும்பலடைந்து, நடுத்தர காலப்பகுதியில் 5% இலக்கில் உறுதியடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது

**முதன்மைப் பணவீக்க எறிவுகள்**
**(கொ.நு.வி.சுட்டெண், காலாண்டுச் சராசரி, ஆண்டிற்காண்டு, %)**





*மூலம்:* மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

**நாணயக் கொள்கை உருவாக்கத்தில் மத்திய வங்கியின் சுயாதீனத்தன்மை** மற்றும் **பெருமளவிலான வெளிப்படைத்தன்மை மற்றும் பகிரங்க பொறுப்புக்கூறல்** என்பன விலை உறுதிப்பாட்டைப் பேணுவதில் சாதனமாயமையும்

# பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டை மீட்டெடுத்தலுடன் இலங்கைப் பொருளாதாரமானது நடுத்தர காலத்தில் அதன் சாதகமான வளர்ச்சி உத்வேகத்தைப் பேணுமென எதிர்பார்க்கப்படுகின்றது

**எறிவுசெய்யப்பட்ட காலாண்டுரீதியான உண்மை மொ.உ.உற்பத்தியின் வளர்ச்சி (ஆண்டிற்காண்டு, %)**




*மூலம்:* மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

உலகளாவிய பொருளாதாரத்திலிருந்து தோன்றுகின்ற பாதகமான தாக்கங்கள் பொருளாதார தோற்றப்பாட்டில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடுமெனினும், **உரிய நேரத்தில் எடுக்கப்படுகின்ற முன்கூட்டிய நடவடிக்கைகளும் எதிர்வினையான கொள்கை வழிமுறைகளும் ஒரு மோசமான தாக்கத்தினை இலகுபடுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.**

# பேரண்டப்பொருளாதார தோற்றப்பாடு

**நாணய**

- மத்திய வங்கியானது **நாணய கொள்கை உருவாக்கத்திற்கு தரவினால் உந்தப்பட்ட அணுகுமுறையைத்** தொடர்ந்து பயன்படுத்தும்
- **அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள் இயல்புநிலையில்** காணப்படுமெனவும் **உள்நாட்டு சந்தை வட்டி வீதங்கள் குறைந்த மட்டங்களில் நிலையாக** காணப்படும்
- வங்கித் துறையினரால் **தனியார்த்துறைக்கான கொடுகடன் விரிவாக்க உத்வேகம் தொடர்ந்து காணப்படும்**

**வெளிநாட்டு**

- வர்த்தக பற்றாக்குறை நடுத்தர காலத்தில் முகாமைசெய்யக்கூடிய மட்டங்களில் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது
- பணிகள் கணக்கு மேலும் பலமடையும் வேளையில் முதலாந்தர வருமான பற்றாக்குறையானது 2025 இல் சுருக்கமடையக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது
- தொழிலாளர் பணவலுப்பல்கள் 2025 இல் வலுவாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும் எண்ணெய் விலைகள் குறைவாக காணப்படுவதனால் மத்திய கிழக்கு பொருளாதாரங்களில் காணப்படும் தாழ்ந்த வளர்ச்சி நடுத்தரக்காலத்தில் பணவலுப்பல்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்
- சந்தையால் நிர்ணயிக்கப்படும் செலாவணி வீதத்தைப் பேணல் மற்றும் ஒதுக்ககளை கட்டமைத்தல் மூலம் வெளிநாட்டுத்துறை உறுதிப்பாடு வலுவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**நிதியியல்**

- பேரண்டப் பொருளாதார மீட்பு, கொள்கை நடவடிக்கைகள் மற்றும் சீர்திருத்தங்கள் என்பவற்றுடன் நிதியியல் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மை 2025 இல் மேலும் வலுமடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
- அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான வங்கிகளின் வெளிப்படுத்துகைகள் படிப்படியாக குறைவடையும்
- 2026 இல் மூன்றாம் பரஸ்பர மதிப்பீட்டு தயார்படுத்தலில் பணம்தூயதாக்கலுக்கு எதிரான வழிமுறைகள் / பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பு வலுப்படுத்தப்படும்.

## *ஐக்கிய அமெரிக்க தீர்வை மாற்றங்கள் தொடர்பான வெளியீட்டிற்குப் பின்னரான இற்றைப்படுத்தல்கள்*

இவ்அறிக்கையை முடிவுறுத்தும் வரை **ஐக்கிய அமெரிக்காவின் பரஸ்பர தீர்வை பற்றிய முறைசார் அறிவித்தலெதுவும்** மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை

**இலங்கையை பாதிக்கக்கூடிய தீர்வைகளில் சாதகமான அதிகரிப்பின் வழிகள்** இவ்அறிக்கையில் **சுருக்கமாக கலந்துரையாடப்பட்டுள்ளன**

ஐக்கிய அமெரிக்காவிற்கான இலங்கையின் ஏற்றுமதிகளின் மீது உரித்தாகும் **44%** பரஸ்பர தீர்வை ஆனது 2025ஆம் ஆண்டு ஏப்பிறல் 02ஆம் திகதி அன்று அறிவிக்கப்பட்டு 2025ஆம் ஆண்டு ஏப்பிறல் 09ஆம் திகதி அன்று அமுலுக்கு வந்தது. அதனைத்தொடர்ந்து, **இவ்வுயர் தீர்வையானது 3 மாதங்களுக்கு நிறுத்திவைக்கப்பட்டது**. இதற்கமைய, **10% உலகளாவிய தீர்வை இலங்கைக்குத் தற்போது ஏற்புடையதாகக் காணப்படுகின்றது**

ஐக்கிய அமெரிக்க அதிகாரிகளுடன் இலங்கை பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தது. **இலங்கைக்கும் ஐக்கிய அமெரிக்க அதிகாரிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் முதலாம் சுற்று ஏற்கனவே இடம்பெற்றதுடன் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன.**

வர்த்தக நிச்சயமற்ற தன்மைகளைத் தளர்வடையச்செய்வது **தொடர்பான சாதகமான சமிக்ஞைகள் பின்னர் தோற்றம்பெறத்தொடங்கின.**

# உலகளாவிய பொருளாதாரத்திற்கான ஐக்கிய அமெரிக்க தீர்வை மாற்றங்களின் தாக்கமானது உயர்வாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது


**வளர்ச்சியும் வர்த்தகமும்**

- 2025 இல் உலகளாவிய பொருளாதார வளர்ச்சி **2.8%** மெதுவடையும் என பன்னாட்டு நாணய நிதியம் எறிவுசெய்கின்றது.
- உலக வர்த்தக அமைப்பு 2025 இற்கான உலகளாவிய வர்த்தகப்பொருள் வர்த்தக அளவினை **-0.2%** இற்கு குறைத்துள்ளது.
- அதிகரித்த வர்த்தக நிச்சயமற்ற தன்மையும் உலகலாவிய கூறாக்கலும் **முதலீட்டை தாழ்த்தி, சந்தை வினைத்திறனைக் குறைத்து, வர்த்தகப் பாய்ச்சல்களை சிதைத்து, நிரம்பல் சங்கிலிகளுக்கு இடையூறை ஏற்படுத்தலாம்.**

**பணவீக்கமும் நாணயகொள்கையை இயல்புநிலைப்படுத்தலும்**

- தீர்வைகளின் நிச்சயமற்ற பணவீக்கத் தாக்கம்
- ஒரு நாட்டின் குறிப்பிட்ட தாக்கங்களினால் நாணய கொள்கை தாக்கங்கள் நிர்ணயிக்கப்படலாம்.
- நீண்ட காலப்பகுதியொன்றிற்கு வட்டி வீதங்கள் உயர்ந்தளவில் காணப்படுவதன் விளைவுகள்
  - **அதிகரித்த இறை, நிதியியல் மற்றும் வெளிநாட்டு இடர்நேர்வுகள்**
  - **மூலதன பாய்ச்சல்கள் மற்றும் உலகலாவிய சமமின்மைகளின் மாற்றம்**
  - **இறுக்கமடைந்த உலகலாவிய நிதியியல் நிலைமைகள்**

வரைபடம் 4.1: உலகளாவிய பொருளாதாரக் கொள்கை நிச்சயமற்றதன்மை சுட்டெண்




*மூலம்:* பெடரல் றிசேவ் பொருளாதார தரவுகளின் மூலம் Baker, Scott R.; Bloom, Nick; Davis, Stephen J.

குறிப்பு: 2025 மாச்சில் சுட்டெண் பெறுமதியானது 543 சுட்டெண் புள்ளிகளுக்கு மேலும் அதிகரித்தது.

# ஐக்கிய அமெரிக்க சந்தைக்கான அவற்றின் உயர் வெளிப்பாட்டின் காரணமாக இலங்கையின் ஏற்றுமதிகள் எதிர்மறையான தாக்கங்களை காணக்கூடும்


**இலங்கை மற்றும் ஐக்கிய அமெரிக்காவுக்கு இடையிலான வர்த்தகம் (ஐ.அ.டொ மில்லியன்)**

| | 2017* | 2018* | 2019* | 2020* | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|---|---|---|
| இறக்குமதிகள் | 2,909 | 3,085 | 3,141 | 2,500 | 3,108 | 3,321 | 2,769 | 2,911 |
| இறக்குமதிகளின் பங்கு % | **25.6** | **25.9** | **26.3** | **24.9** | **24.9** | **25.3** | **23.2** | **22.8** |
| ஏற்றுமதிகள் | 492 | 519 | 542 | 495 | 511 | 378 | 504 | 443 |
| ஏற்றுமதிகளின் பங்கு % | 2.3 | 2.3 | 2.7 | 3.1 | 2.5 | 2.1 | 3.0 | 2.4 |
| **ஐக்கிய அமைரிக்காவுடனான வர்த்தக மீதி** | **2,417** | **2,566** | **2,600** | **2,006** | **2,597** | **2,942** | **2,265** | **2,468** |

* சனாதிபதி ட்ரம்ப் அவர்கள் சனாதிபதி பதவி வகித்த காலப்பகுதி

ஐக்கிய அமெரிக்க சந்தைக்கான உயர்ந்தளவிலான வெளிப்படுத்துகையின் காரணமாக **ஆடைகள், புடவைப் பொருட்கள், இறப்பர் உற்பத்திகள், தெங்கு உற்பத்திகள், இரும்பு மற்றும் உருக்குப் பொருட்கள், சிறு விளையாட்டுப் பொருட்கள்** போன்ற ஏற்றுமதி துறைகள் இடர்நேர்வுக்கு உட்பட்டுக் காணப்படக்கூடும்

**ஐக்கிய அமெரிக்காவிற்கான இலங்கையின் ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு - 2024**




மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம்

# முடிவுரை

பொருளாதாரச் சரிவு, அண்மைய நெருக்கடிக் காலப்பகுதியில் பிரஜைகள் அனுபவித்த இன்னல்கள் மற்றும் ஒன்றுசேர்ந்த பொருளாதார பாதிப்படையக்கூடியதன்மைகள் என்பன மேலும் கொள்கைத் தவறுகள் ஏற்படுவதற்கு இடமளிக்காது.

எதிர்வருகின்ற காலத்தில் இலங்கையின் பொருளாதார சுபீட்சமானது கடின உழைப்பின் மூலம் பெறப்பட்ட பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டின் பாதுகாப்பு மற்றும் பொருத்தமான வளர்ச்சி சார்ந்த சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தல் என்பவற்றில் பாரியளவில் தங்கியிருக்கும்.

# நீடித்துநிலைத்திருக்கின்ற உறுதிப்பாடு மற்றும் நீண்டகால பொருளாதார வளர்ச்சி என்பவற்றினை நோக்கிய நாட்டின் முன்னேற்றத்திற்கான செயற்பட்டியல்

**தற்போது முன்னெடுக்கப்படுகின்ற பேரண்டப்பொருளாதார சீராக்கம் மற்றும் வளர்ச்சியினை மேம்படுத்துகின்ற கட்டமைப்புசார் சீர்திருத்தங்கள் என்பவற்றினை நோக்கிய** உறுதியான அர்ப்பணிப்பு

**கொள்கை வகுப்பதில்** தொடர்ச்சியான **முன்மதிமிக்கதன்மை** மற்றும் **வெளிநாட்டு மற்றும் இறைத் தாங்கிருப்புக்களை** மேலும் **வலுப்படுத்தல்**

**வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் மற்றும் தாக்குப்பிடிக்கக்கூடியதன்மை** என்பவற்றினை மேம்படுத்தல்

**உற்பத்தித்திறன் வாய்ந்த மற்றும் வெளிநாட்டுச் செலாவணியை உருவாக்கின்ற துறைகளில் வெளிநாட்டு முதலீடுகளைக்** கவர்தல்

**முதலீட்டாளர்களுக்கு நியாயமான மற்றும் பாதுகாப்பான வியாபாரச் சூழலொன்றினை** உறுதிப்படுத்தல்

குறிப்பாக, **தொழில்நுட்பத்தைத் தழுவுதல், இலத்திரனியல் வசதிக்குட்படுத்துகின்றதன்மை மற்றும் திறன் மேம்பாடு** ஆகியவற்றினூடாகக் கட்டமைப்புசார் பொருளாதார மாற்றம்

நிலையான கொள்கைகள், சட்டம், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் நிறுவனரீதியிலான ஆதரவு என்பனவற்றின் மூலம் **தனியார் துறைப் பங்கேற்பினை மேம்படுத்தல்**

# சிறப்பு வரைபடங்கள்

# சிறப்பு வரைபடங்கள்

**1.1.** உள்நாட்டு எரிபொருள் விற்பனைகளிலும் விலைகளிலுமுள்ள போக்குகள்

**1.2.** பயன்பாடுகளுக்கான செலவுப் பிரதிபலிப்பு விலையிடலின் முக்கியத்துவம்

**1.3.** மாதாந்த வெளிநாட்டு நாணயக் கணக்குப் புள்ளிவிபரங்கள்

**1.4.** நெருக்கடிக்கு முன்னரான நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைக்கு நிதியிடல் மற்றும் நிதியியல் கணக்கின் நெருக்கடிக்கு பின்னரான இயக்கவாற்றல்

**1.5.** இலங்கையின் ஒதுக்குப் போதுமைக் குறிகாட்டிகளை மேம்படுத்தல்


**1.6.** பன்னாட்டு ஒதுக்குகளின் நெருக்கடிக்கு பின்னைய திரும்பல்

**1.7.** நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதத்தின் கீழான செலாவணி வீத இயக்கவாற்றல்

**1.8.** அரசிறை, செலவினம் மற்றும் முக்கிய இறை நிலுவைகள்




# பயன்பாடுகளுக்கான செலவுப் பிரதிபலிப்பு விலையிடலின் முக்கியத்துவம்




- இலங்கையின் **இலக்கிடப்படாத** பயன்பாட்டு **மானியங்கள்** அரச நிதிகளை அழுத்தத்திற்குட்படுத்தியதுடன் **முதலீடுகளைக் குறைவடையச்செய்தன**
- இலக்கிடப்படாத வலு மானியங்கள் பொதுமக்களுக்கும் வியாபாரங்களுக்கும் குறுங்கால நிவாரணங்களை வழங்கிய போதிலும், **இறுதியில்** வலு, வரிகள் மற்றும் ஒட்டுமொத்த பணவீக்கம் என்பவற்றிற்கான உயர் விலைகளின் வடிவத்தில் **பின்னர் திரட்டப்பட்ட செலவை அவர்கள் சுமக்க வேண்டியிருந்தது**
- **பயன்பாடுகளுக்கான செலவுப் பிரதிபலிப்பு விலையிடல் பொறிமுறையிலிருந்து விலகுவதானது** அரசாங்கத்திற்கோ அல்லது வியாபாரங்களுக்கோ அல்லது பொதுமக்களுக்கோ நீண்ட காலத்திற்கு **பயனளிப்பதாயமைவதில்லை**

# நெருக்கடிக்கு முன்னரான நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைக்கு நிதியிடல் மற்றும் நிதியியல் கணக்கின் நெருக்கடிக்கு பின்னரான இயக்கவாற்றல்

**நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையின் நிதியிடல்**




- **நெருக்கடிக்கு முன்னர்,** இலங்கையின் **நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகள்** வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் முதலீடுகள் என்பவற்றினூடாகப் பாரியளவில் நிதியிடப்பட்டன
- ஆயினும் 2020இலிருந்து 2022 வரையான **வீழ்ச்சியடைந்து செல்கின்ற உட்பாய்ச்சல்கள் குறிப்பிடத்தக்க ஒதுக்குக் குறைவுகளிற்கு வழிவகுத்தன**
- **நெருக்கடிக்கு பின்னரான வெளிநாட்டுத் துறை உறுதிப்பாடானது 2023 மற்றும் 2024 காலப்பகுதியில் மிகைகளிற்கு வழிவகுத்து,** ஒதுக்குத் திரட்சிக்குப் பங்களித்ததுடன் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களை வலுப்படுத்தியது

# சிறப்புக் குறிப்புக்கள்

1. வெளிநாட்டுத் துறைப் புள்ளிவிபரங்களை மேம்படுத்துதல்: பணிகள் வர்த்தகம் மீதான முக்கிய நுண்நோக்குகள்

2. தாக்குப்பிடிக்கும் தன்மையினை வலுப்படுத்துவதற்கான அண்மைக்கால வங்கித்தொழில் துறைச் சீர்திருத்தங்கள்


3. ஒற்றைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறையொன்றிற்கான மாறுதல்

4. நாணயக் கொள்கைப் பொறுப்புக்கூறல் மற்றும் பணவீக்க இலக்குகள்



# ஒற்றைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறையொன்றிற்கான மாறுதல்

வரைபடம் சி.கு. 3.2: ஓரிரவு கொள்கை வீதம், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் மற்றும் துணைநில் வசதி வீதங்கள்




**மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைச் சமிக்ஞையிடுவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்குமான முதலாந்தர நாணயக் கொள்கைக் கருவியாக ஓரிரவுக் கொள்கை வீதத்தினை அறிமுகப்படுத்தியது.**

**இது**

- ✓ *நாணயக் கொள்கைத் தொடர்பூட்டலினை எளிதாக்கும்*
- ✓ *நாணயக் கொள்கை ஊடுகடத்தலின் வினைத்திறனை மேம்படுத்தும்*
- ✓ *கொள்கை வழிகாட்டுதலில் உள்ள நிச்சயமற்றதன்மையினைக் குறைக்கும்*
- ✓ *பெருமளவிலான நம்பிக்கையுடன் தகவலறிந்த தீர்மனமெடுத்தலினை வசதிப்படுத்தும்*
- ✓ *நிதியியல் உற்பத்திகளைத் துல்லியமாக விலையிடுவதற்கு உதவும்*

# வெளிநாட்டுத் துறைப் புள்ளிவிபரங்களை மேம்படுத்துதல்: பணிகள் வர்த்தகம் மீதான முக்கிய நுண்நோக்குகள்


வெளிநாட்டுத் துறைப் புள்ளிவிபரங்களின் துல்லியத்தையும் நுணுக்கத்தையும் மேம்படுத்துவதற்கு **பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமையினை மத்திய வங்கி உருவாக்கியது**

வங்கித்தொழில் முறைமையில் அறிக்கையிடப்பட்ட உண்மை வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு **எல்லைகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களைப் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமையானது** சேகரித்து, வகைப்படுத்துகின்றது


**மாதாந்த ரீதியிலான பணிகள் வர்த்தகப் புள்ளிவிபரங்களை** மத்திய வங்கி அறிக்கையிடுவதனை பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் முறைமையானது வசதிப்படுத்தியது

நடைமுறைக் கணக்குப் புள்ளிவிபரங்களை அடிக்கடி மற்றும் துல்லியமாக அறிக்கையிடுகின்றமையானது **கொள்கை வகுப்பாளர்களுக்குப் பெறுமதிமிக்க நுண்ணறிவுகளை** வழங்குகின்றது

வரைபடம் சி.கு 1.1: வணிகப்பொருள் மற்றும் சேவைகள் ஏற்றுமதிகள் மீதான புள்ளிவிபரங்கள்




வரைபடம் சி.கு 1.2: சுற்றுலாத்துறை உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் நீங்கலாக பணிகள் கணக்கு மீதான புள்ளிவிபரங்கள்



# ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வு 2024இற்கான மேலதிக தரவுகளை மத்திய வங்கியின் இணையத்தளத்தினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும்

முழுமையான அறிக்கையினைப் பெற்றுக்கொள்வதற்கு கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்...

நன்றி!